"உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் மிகவும் பயனுள்ள திட்டம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - மக்களுக்கான அரசை நடத்தி வருகிறார்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் புகழாரம்!

சென்னை, ஜூலை 16-

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் மிகவும் பயனுள்ள திட்டமாகும் என்று 'தினகரன்' நாளேட்டின் நேற்றைய தலையங்கத்தில் புகழாரம் சூட்டியுள்ளது.

இது குறித்து "மக்களுடன் முதல்வர்" என்ற தலைப்பில் 'தினகரன்' எழுதியுள்ள நேற்றைய தலையங்கம் வருமாறு:-


தினகரன்

ஜூலை 15, 2025 செவ்வாய்க்கிழமை

மக்களுடன் முதல்வர்

தமிழ்நாடு அரசின் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் மக்களிடையே பெரிய வரவேற்பை பெற்றுள்ளது. தமிழக அரசின் வேகங்களுக்கு தடை போடும் விதமாக தமிழ்நாட்டுக்கான நிதியை தராமல் ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது. ஆனால் எதற்கும் அசராமல் புதிய புதிய திட்டங்கள் மூலம் சிறப்பான ஆட்சியை மு.க.ஸ்டாலின் நடத்தி வருகிறார்.

தமிழ்நாடு அரசு துறைகளின் முக்கிய தகவல்கள், திட்டங்கள் உள்ளிட்டவைகள் குறித்து ஊடகங்கள் மூலமாக பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதற்கும், பிற அரசு துறைகளுடன் ஒருங்கிணைப்பதற்கும், செய்தி தொடர்பாளர்களாக 4 ஐஏஎஸ் அதிகாரிகள் நேற்று நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைக்கிறார். இந்த திட்டம் மிகவும் பயனுள்ள திட்டமாகும். காரணம் இத்திட்டத்தின் மூலம் நீண்ட காலமாக விவசாயிகள் மற்றும் புதிய வீடுகள் வாங்கியவர்கள் பட்டா மாற்றம், மின் இணைப்பு பெயர் மாற்றம் போன்ற பல மக்களின் பிரச்சனைகளை நேரடியாக வீடு தேடி சென்று அதிகாரிகள் குறைகளை நிவர்த்தி செய்கின்றனர்.

தமிழ்நாடு அரசின் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் மக்களிடையே பெரிய வரவேற்பை பெற்றுள்ளது. தமிழக அரசின் வேகங்களுக்கு தடை போடும் விதமாக தமிழ்நாட்டுக்கான நிதியை தராமல் ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது. ஆனால் எதற்கும் அசராமல் புதிய புதிய திட்டங்கள் மூலம் சிறப்பான ஆட்சியை மு.க.ஸ்டாலின் அவர்கள் நடத்தி வருகிறார்.

தமிழ்நாடு அரசு துறைகளின் முக்கிய தகவல்கள், திட்டங்கள் உள்ளிட்டவைகள் குறித்து ஊடகங்கள் மூலமாக பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதற்கும், பிற அரசு துறைகளுடன் ஒருங்கிணைப்பதற்கும், செய்தி தொடர்பாளர்களாக 4 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நேற்று நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைக்கிறார். இந்த திட்டம் மிகவும் பயனுள்ள திட்டமாகும். காரணம் இத்திட்டத்தின் மூலம் நீண்ட காலமாக விவசாயிகள் மற்றும் புதிய வீடுகள் வாங்கியவர்கள் பட்டா மாற்றம், மின் இணைப்பு பெயர் மாற்றம் போன்ற பல மக்களின் பிரச்சினைகளை நேரடியாக வீடு தேடி சென்று அதிகாரிகள் குறைகளை நிவர்த்தி செய்கின்றனர்.

இவ்வாறாக மக்களுக்கான அரசாக நடத்தி வருகிறார். தமிழகத்தில் செயல்படுத்தப்படவிருக்கும் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் எதற்காக, எப்படி, ஏன் நடத்தப்படுகிறது என்பது குறித்த முழு விவரங்களை தமிழக அரசு தெரிவித்துள்ளது. அரசின் செயல்பாடுகள் உரிய நேரத்தில் மக்களை சென்றடைய வேண்டும். உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் வரும் மனுக்களுக்கு 45 நாட்களில் தீர்வு காண வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். அதன்படி அனைத்து துறைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இம்முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமை தொகைக்கான விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

தகுதியானவர்கள் விடுபட்டு இருந்தால் விண்ணப்பங்களை பெற்று நிரப்பி கொடுக்க, உடனடியாக பதிவேற்றம் செய்யப்பட்டு திட்டத்தில் இணைக்கப்படுவர். மக்கள் அதிகமாக கூடுகிற, வசிக்கிற இடங்களில் முகாம்கள் நடத்தப்படுகிறது. மக்களுக்கு நாம் முகாம் நடத்துவது தெரியப்படுத்த, முகாம் நடத்துவதற்கு முன்பாக தன்னார்வலர்களை அனுப்பி சிறப்பு திட்ட முகாம் நடத்தப்படுகிறது. இதற்காக ஒரு லட்சம் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். நவம்பர் வரை 10,000 முகாம்கள் நடத்தப்பட உள்ளன. முன்பு 20,000 மக்கள் தொகைக்கு ஒரு முகாம் இருந்தது. இப்போது 10,000 மக்கள் தொகைக்கு ஒரு முகாம் அமைக்கப்பட உள்ளது.

முகாம்கள் நடக்கும் ஒரு வாரத்துக்கு முன்பு வீடு, வீடாக சென்று மக்களுக்கு தெரியப்படுத்தப்படும். வாரத்தில் 4 நாட்கள் முகாம் நடைபெறும். இது நவம்பர் மாதம் வரை நடைபெறவிருக்கிறது. மக்களின் குறைகளை கேட்டறிய, 1100 என்ற எண்ணுடன் 100 பேர் கொண்ட உதவி மையம் செல்பட்டு வருகிறது. அரசின் சேவைகளை பெற மக்கள் சிரமப்படுவதை அறிந்து மக்களுடன் முதல்வர் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அரசின் சேவைகளை பெற மக்கள் சிரமப்படுவதை அறிந்து, மக்களுடன் முதல்வர் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அரசின் திட்டங்கள், செயல்பாடுகள் மக்களிடையே விரைவாக செல்ல கண்காணிக்கப்பட்டு வருகிறது. மக்களின் புகார் மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு வருகிறது. முதலமைச்சரின் முகவரி துறை மூலம் 1.5 கோடி மனுக்கள் பெறப்பட்டன. கடந்த 30ம் தேதி வரை 1 கோடி மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. 2,344 ஊரக முகாம்கள் மூலம் 95 சதவீதம் தீர்வு காணப்பட்டுள்ளதை மக்களுடன் முதல்வர் என்பதற்கு சான்றாக எடுத்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு 'தினகரன்' தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி மூலமாக "உங்களுடன் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியம், ஆலம்பாடி ஊராட்சியில் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் தலைவர் ஷேக் அப்துல் ரகுமான், விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி , மாவட்ட துணை செயலாளர் இரா.கற்பகம், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், S.லூயிஸ், நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், ஒன்றிய குழு தலைவர் தனலட்சுமி உமேஷ்வரன், பேரூராட்சி தலைவர் S.அன்பு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் இரா.கிருஷ்ணராஜ், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் அறிவழகன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் கார்த்திகேயன், புஷ்பராஜ், ஒன்றிய நிர்வாகிகள் முருகையன், காத்தவராயன், சுலோச்சனா ஏழுமலை, சேகர், கோபால், சாந்தகுமார், ஒன்றிய கவுன்சிலர்கள் ராஜராஜேஸ்வரி, குப்புசாமி, ஊராட்சி மன்ற தலைவர் ராஜகுமாரி, சிவபூசணம், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் ஜீவா, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணி

## புதுச்சேரி–காரைக்கால் மாநில அமைப்பாளர்– துணை அமைப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க.அமைப்பு சாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி-புதுச்சேரி - காரைக்கால் மாநில அமைப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப் படுகிறார்கள்.

**புதுச்சேரி - காரைக்கால் மாநிலம்**

தலைவர் - எம். லாரன்ஸ் செல்வராஜ்
கே. 1, ஹவுசிங் போர்டு,
நேரு நகர்,
காரைக்கால்.

துணைத் தலைவர் - ஜி. சேதுராமன்
355, சுனாமி நகர்,
காரைக்கால் மேடு,
காரைக்கால்.

அமைப்பாளர் - அ. அக்பர் அலி
2, வி.ஓ.சி. தெரு,
பி.கே. சாலை,
காரைக்கால்.

துணை அமைப்பாளர்கள் 1)என்.முகந்தன் 43, நடுஓடு துறை நிரவி அஞ்சல், காரைக்கால். 2) பி. சகாய ராஜ் 26, செபஸ்தியார் கோவில் தெரு, தருமபுரம், காரைக்கால். 3) எஸ். பாவா பாஹீருத்தீன் 1, கீதர்பள்ளி தெரு, காரைக்கால். 4) எஸ். முருகையன் 20, தெற்கு தெரு, கீழையூர் தெற்கு, திருபட்டினம், காரைக்கால். 5) ஜி.வேல்முருகன் 2, தெற்கு தெரு, வரிச்சிக்குடி, கோட்டுச்சேரி, காரைக்கால்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 11.07.2025

**டி.செங்குட்டுவன்**
செயலாளர்
தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணி

காணொலிக் காட்சி வாயிலாக

## சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு - காஞ்சிபுரம் வடக்கு - திருவள்ளூர் கிழக்கு, மத்திய, வடக்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட சட்டமன்ற தொகுதிப் பார்வையாளர்கள் கூட்டம்!

### துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி., அறிவிப்பு

சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு - காஞ்சிபுரம் வடக்கு - திருவள்ளூர் கிழக்கு, மத்திய, வடக்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் கூட்டம் நாளை (17.7.2025, வியாழக்கிழமை) காலை 11.30 மணியளவில் காணொலி காட்சி வாயிலாக நடைபெறும்.

அதுபோது இம்மாவட்டங்களுக்குட்பட்ட சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் அனைவரும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

``அண்ணா அறிவாலயம்''
சென்னை 600 018,
நாள் : 14-7- 2025.

**ஆ.இராசா எம்.பி.**
துணைப் பொதுச் செயலாளர்
தி.மு.க.



சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்குப் பகுதி 171வது வட்ட கழகத்தில் சுற்றுச்சூழல் அணி பகுதி அமைப்பாளர் எஸ்.ஜீவரத்தினம் ஏற்பாட்டில் அறுசுவை விருந்து மற்றும் மரக்கன்று நடும் விழா நடைபெற்றது. மயிலை சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு விருந்து வழங்கி மரக்கன்று நட்டார். உடன் பகுதி செயலாளர் எஸ்.முரளி, வட்ட செயலாளர் துரை பார்த்திபன், மாமன்ற உறுப்பினர் கீதா முரளி, 124–வது வட்ட செயலாளர் மா.பா.அன்பு, பகுதி துணை செயலாளர் பி.எல்.தாஸ், வட்ட துணை செயலாளர் எஸ்.ரவிச்சந்திரன், சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் என்.எஸ்.பால சுப்பிரமணியன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் உ.துரைக்கண்ணு, டி.எஸ்.விஷ்ணு சங்கர், கே.எல்.சிவானந்தம், பி.சார்லி சுற்றுச்சூழல் அணி மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், அணியின் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# திருவெறும்பூர் - நவல்பட்டில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

திருவெறும்பூர் 16

திருவெறும்பூர் அருகே உள்ள நவல்பட்டு தனியார் திருமண மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் தான் திட்டத்தை தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

பொதுமக்களின் சிரமத்தை போக்கும் வகையில் தமிழக அரசு சார்பில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் இன்று தமிழக முழுவதும் பத்தாயிரம் இடங்களில் நடத்துவதற்கு முடிவு செய்து நடத்தப்படுகிறது தமிழக முதல்வர் சிதம்ப ரத்தில் இந்த முகாமை தொடங்கி வைத்தார்.

அதன் ஒரு பகுதியாக திருவெறும்பூர் அருகே உள்ள நவல்பட்டு ஊராட்சி மற்றும் காந்தளூர் ஊராட்சிக்கு உட்பட்ட மக்கள் பயன்பெறும் வகையில் நவல்பட்டு உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடந்த முகாமிற்கு திருச்சி கலெக்டர் சரவணன் தலைமை வைத்தார் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பின் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்து செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது.

புரட்சிகரமான இந்த திட்டம் நகராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் 13 துறைகளில் கொண்டு 46 வகையான சேவையில் வழங்கப்படுகிறது.

தற்பொழுது இங்கு நடைபெறும் இந்த நவல்பட்டு மற்றும் காந்தலூர் மக்களுக்காக நடத்தப்படுகிறது மற்ற ஊர்களை சேர்ந்த மக்கள் வந்திருந்தாலும் அவர்கள் ஏமாற்றம் அடைந்து விடக்கூடாது என்பதற்காக அவர்களது மனுவையும் பெற்று பதிவு செய்து கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது சிதம்பரத்தில் தமிழக முதல்வர் இந்த திட்டத்தை தொடங்கி வைக்கிறார் திருச்சி மாவட்டத்தில் இன்று நான்கு இடங்களில் இந்த திட்ட முகாம் நடைபெறுகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் திமுக அரசியல் திருச்சி மாவட்டத்தில் செய்த வளர்ச்சி திட்ட பணிகள்

ரூ.408 கோடி மதிப்பீட்டில், 'முத்தமிழறிஞர் கலைஞர் ஒருங்கிணைந்த பேருந்து முனையம்,

ரூ128 கோடி மதிப்பீட்டில் 38 ஏக்கர் பரப்பளவில் 'அண்ணா கனரக வாகன சரக்கு முனையம்

ரூ.236 கோடி மதிப்பீட்டில், 22 ஏக்கர் பரப்பளவில் 'பெரியார் ஒருங்கிணைந்த காய்கறி அங்காடி' அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு இருக்கிறது.

ரூ290 கோடி மதிப்பீட்டில், பெருந்தலைவர் காமராசர் பெயரில் மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம்.

ரூ18 கோடியே 9 இலட்சம் மதிப்பீட்டில் 'பறவைகள் பூங்கா.

ரூ150 கோடி மதிப்பீட்டில் 'சர்வதேச ஒலிம்பிக் அகாடமி.

ரூ3 கோடி மதிப்பீட்டில் ஜல்லிக்கட்டு அரங்கம்!

ரூ4 கோடியே 27 இலட்சம் மதிப்பீட்டில் பச்சமலை சுற்றுலா திட்டம்,

தொழில் புரட்சி ஏற்படுத்திட மணப்பாறையில், 1100 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் தொடங்கப்பட்டிருக்கிறது. அதில் உலகின் முன்னணி நிறுவனங்களான ஜபில், பெப்சிகோ தொழில் துவங்க உள்ளார்கள். இதனால் 10,000க்கும் அதிகமான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மேலும், ரூ.400 கோடி மதிப்பிலான டைட்டில் பூங்கா அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இப்படி, கடந்த நான்கு ஆண்டுகளில், 26 ஆயிரத்து 66 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்கள் திருச்சிக்காக மட்டுமே நம்முடைய முதலமைச்சரால் தரப்பட்டிருக்கிறது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மாதம் 4 இலட்சத்து 42 ஆயிரத்து 124 பேர் பயன் அடைகிறார்கள்.

புதுமைப்பெண் மாணவிகள் 34 ஆயிரத்து 784 பேர் பயனடைகிறார்கள். தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் 16 ஆயிரத்து 955 பேர் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள்.

காலை உணவுத் திட்டத்தில் 86 ஆயிரம் பிள்ளைகள் பயன் அடைகிறார்கள்.

முதல்வரின் முகவரி திட்டத்தில், தீர்வு காணப்பட்டது 3 இலட்சம் மனுக்கள். அதாவது 3 இலட்சம் குடும்பங்கள்.

நான் முதல்வன் திட்டத்தில், 68 ஆயிரம் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

72 ஆயிரத்து 767 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

5 ஆயிரத்து 843 விவசாயிகளுக்கு புதிய இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

70 ஆயிரத்து 360 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ4 ஆயிரத்து 160 கோடி கடனுதவிகள் வழங்கப்பட்டிருக்கிறது.

ரூ99 ஆயிரத்து 181 கர்ப்பிணி பெண்களுக்கு நிதியுதவி, கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் 4000 வீடுகள், 54 ஆயிரத்து 428 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு இருக்கிறது.

மேலும், கடந்த மே 9ஆம் தேதி பஞ்சப்பூர் பேருந்து முனையத்தை திறந்து வைத்தப் பின்னர் ரூ527 கோடி ரூபாய் மதிப்பிலான, 3 ஆயிரத்து 597 பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ1,032 கோடி மதிப்பிலான 7 ஆயிரத்து 122 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

இந்த முகாமில் வீட்டு மனை பட்டா கலைஞர் மகளிர் உரிமை தொகை கேட்டு அதிக விண்ணப்பங்கள் வரப்படுகிறது இதற்காக பொதுமக்களுக்கு கூடுதல் கவுண்டர்கள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கலெக்டர் கூறியுள்ளார் இதனால் மக்கள் அதிகம் பயன்பெறுவார்கள் என்றார்.

இந்த விழாவில் ஜி.ஆர்.டி.ஓ அருள் பிரகாசம், திருவெறும்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அண்ணாதுரை, திருவெறும்பூர் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் கும்பக்குடி கங்காதரன், உட்பட அரசு அலுவலர்களும் கட்சி நிர்வாகிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர் .

எடப்பாடி சட்டமன்றத் தொகுதி

# கொங்கணாபுரத்தில் அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

### டி.எம்.செல்வகணபதி எம்.பி. முன்னிலையில்!

சேலம், ஜூலை 16 -

சேலம் மேற்கு மாவட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட கோரணம்பட்டி அ.தி.மு.க. முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் எஸ்.ராஜ்குமார் தலைமையில், முன்னாள் துணைத் தலைவர் செல்வகுமார், தகவல் தொழில்நுட்ப செயலாளர் மூர்த்தி, சண்முகம், மணிகண்டன், தினேஷ் ஆகியோர் சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. முன்னிலையில் தங்களை தி.மு.கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

2026ம் ஆண்டு நடைபெறும் தமிழக சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கழக அரசு மீண்டும் ஆட்சி அமைக்க, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை மீண்டும் முதல்வராகக் முழுமையாக உழைப்போம் என்று தெரிவித்தனர்.

மேலும் கழகத்தில் இணைந்தவர்களை கருப்பு சிவப்பு துண்டை அணிவித்து, வரவேற்று, வாழ்த்துகள் தெரிவித்தனர்.




விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, ஒன்றிய பெருந்தலைவர்கள் விஜயகுமார், கண்மணி நெடுஞ்செழியன், அமுதா ரவிக்குமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், நகர செயலாளர் கார்த்திக், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.